வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 08.11. 2024 நேரம் மாலை 6.10 மணி

-----------------------

*தலைப்புச் செய்திகள்*

லஞ்ச ஊழலை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாது என்பதான அரசின் கொள்கை, லஞ்சத்தை முற்றிலுமாக வேரறுக்கும் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

ஏனாம் பகுதியில், ஓஎன்ஜிசி பணிகளால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான 2ஆம் கட்ட இழப்பீட்டுத் தொகை, விரைவில் அவரவர் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் இருந்து, பெங்களூரு மற்றும் ஹைதராபாத்திற்கு, இண்டிகோ நிறுவனத்தின் விமான சேவை, டிசம்பர் 20ஆம் தேதி முதல் தொடங்க உள்ளது.

அடுத்த 48 மணி நேரத்தில், வங்கக் கடலில், காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-----------------------

*லஞ்ச ஒழிப்பு* 1 (18)

லஞ்ச ஊழலை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாது என்பதான அரசின் கொள்கை, லஞ்சத்தை முற்றிலுமாக வேரறுக்கும் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். மத்திய லஞ்ச ஒழிப்பு ஆணையம் சார்பில், இன்று புதுடெல்லியில் நடைபெற்ற தேசிய லஞ்ச ஒழிப்பு வார விழாவில் உரையாற்றிய அவர், இந்திய

சமூகத்தில் ஒழுக்கமும், நேர்மையுமே வாழ்க்கை லட்சியங்களாக திகழ்வதாகவும், லஞ்ச ஊழல் ஒரு நோய் என்பதால், அதை முற்றிலுமாக ஒழித்தல் அவசியம் என்றும் கூறினார். லஞ்சத்தை ஒழிக்க, அரசு பல்வேறு முன் முயற்சிகளை மேற்கொண்டு இருப்பதாகவும், நேரடி ரொக்க மானியம், இ-வர்த்தக சந்தை, பொருளாதார குற்றவாளிகள் சட்டம் போன்றவை இதற்கு சான்றுகளாகும் என்றும், அவர் தெரிவித்தார்.

லஞ்ச ஊழலில் ஈடுபடுவோர் மீது உடனுக்குடன் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார். நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டால், அல்லது, நடவடிக்கை கடுமையாக இல்லாவிட்டால், அறநெறிக்கு எதிராக நடப்பவர்களை, ஊக்குவிப்பது போல் ஆகும் என்றும் அவர் கூறினார். அதேசமயம், தனிப்பட்ட ஒவ்வொருவரையும், ஒவ்வொரு செயல்பாட்டையும், சந்தேகிக்கத் தேவையில்லை என்றும், சமுதாயத்தில், நீதி மற்றும்



சமத்துவத்தை நிலை நாட்டுவதே நடவடிக்கையின் நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மற்றவர்கள் மீதான பரஸ்பர நம்பிக்கையே சமுதாய வாழ்வின் அஸ்திவாரம் என்பதால், இத்தகைய நம்பிக்கைக்கு எதிரான லஞ்சத்தினால், பொருளாதார முன்னேற்றம் தடைபடுவதற்கு அப்பாற்பட்டு, சமுதாயத்தில் பரஸ்பர நம்பிக்கையும் குறைவதாக, அவர் குறிப்பிட்டார். அரசின் செயல்பாடுகள், மற்றும், நலத் திட்டங்களின்

மீதான மக்களின் நம்பிக்கையே, அரசின் பலம் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஆண்டுதோறும், சர்தார் வல்லபாய் பட்டேல் பிறந்த நாளான அக்டோபர் 31ஆம் தேதி, நாட்டின் ஒன்றுமை மற்றும் நாணயத்தை பேணிக் காக்க உறுதி ஏற்க வேண்டும் என, குடியரசுத் தலைவர் கேட்டுக் கொண்டார். இந்த உறுதிமொழியை முழுமையாக நிறைவேற்ற, நாட்டு மக்கள் அனைவருக்கும் கூட்டுப் பொறுப்பு இருப்பதாக, அவர் குறிப்பிட்டார்.

மத்திய லஞ்ச ஒழிப்பு ஆணையர் திரு. பிகே ஸ்ரீவாஸ்தவா உட்பட பலர், விழாவில் கலந்து கொண்டனர்.

-----------------------

*மோடி-வாழ்த்து* (6)

சூரிய பகவானை வழிபடுவதற்கான மகாபர்வ சத் பூஜையின் 4ஆம் நாளான காலை அர்க்ய பூஜை இன்று கொண்டாடப் படுவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். சத் பூஜையின் போது, இயற்கை, மற்றும் கலாச்சாரம் மீது நமக்கு கிடைக்கும் பார்வை, அனைவரின் வாழ்க்கையிலும் சக்தி, மற்றும் உற்சாகத்தை நிரப்பும் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார்.

-----------------------

*மோடி-அத்வானி* (10)

இன்று 97ஆவது பிறந்த நாள் காணும் மூத்த பிஜேபி தலைவர் திரு. எல்.கே அத்வானிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். நாட்டில் மிகவும் போற்றப்படும் அரசியல் அறிஞரான பாரத ரத்னா எல்கே அத்வானி, நாட்டின் முன்னேற்றத்திற்காக வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்டவர் என்றும், அவரது அறிவுக் கூர்மை, மற்றும், வளமான அகப் பார்வைகளை, தாம் எப்போதுமே மதிப்பதாகவும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். முதுபெரும் பிஜேபி தலைவர் திரு. எல்.கே அத்வானியின் வழிகாட்டுதலை பெற்றது, தமக்கு வாய்த்த அதிர்ஷ்டம் என்றும், திரு. எல்கே அத்வானி நீண்டகாலம் வாழ, தாம் வேண்டுவதாகவும், பிரதமர் தெரிவித்துள்ளார்.

----------------------

*பிரச்சாரம்* 1 (18)

மஹாராஷ்ட்ரா, மற்றும் ஜார்கண்டில், சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. மஹாராஷ்ட்ர மாநிலத்தில், அனைத்து 288 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வரும் 20ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரத்தில், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மஹாராட்டிர மாநிலம் துலே பகுதியில், பிரச்சார பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார். மாநிலத்தில், கடந்த இரண்டரை ஆண்டுகளாக ஏற்பட்ட வளர்ச்சி தொடரும் என்றும், அடுத்த 5 ஆண்டுகளில், தமது அரசு மஹாராஷ்ட்ர மாநிலத்தின்

வளர்ச்சியை புதிய உயரங்களுக்கு இட்டுச் செல்லும் என்றும் அவர் கூறினார். எதிர்கட்சிகளின் மஹா விகாஸ் கூட்டணி, வளர்ச்சித் திட்டங்களுக்கு தடைபடுவதாகவும், அவர் குற்றம் சாட்டினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு, பெண்களின் அதிகாரப் பங்கேற்பு அவசியம் என்பதை கருத்தில் கொண்டே, நாரிசக்தி வந்தன், உஜ்வாலா போன்ற திட்டங்களை, தமது அரசு செயல்படுத்தி வருவதாக பிரதமர் கூறினார். இதேபோல மஹாராஷ்ட்ர மாநில அரசும், பெண்களை மையமாக கொண்டே பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார். விவசாயிகள், மற்றும் பழங்குடியினரின் நலனுக்கான பல்வேறு திட்டங்களை மத்திய-மாநில அரசுகள் செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

*பிரச்சாரம்* 2 (12)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, மஹாராஷ்ட்ர மாநிலம் நாசிக்கிலும், தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

இதற்கிடையே, தேசியவாத காங்கிரஸ்-எஸ்பி பிரிவின் தலைவர் திரு. சரத்பவார், இன்று வார்தாவிலும், அக்கட்சியின் மூத்த தலைவர் திருமதி சுப்ரியா சுலே, புனே பகுதியிலும், தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

ஜார்கண்டில், வரும் 13ஆம் தேதி நடைபெற உள்ள முதல்கட்ட சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரத்தின் ஒருபகுதியாக, மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி இன்று, சிம்டெகா பகுதியில்

பிரச்சார பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார். நடப்பு தேர்தல், அரசியல் சாசனத்தின் பாதுகாவலர்களுக்கும், அரசியல் சாசனத்தை அழிக்க நினைப்பவர்களுக்கும் இடையிலான போராட்டம் என்று அவர் கூறினார்.

ஜார்கண்ட் சட்டமன்றத் தேர்தலுக்கான பிஜேபி மேலிடப் பொறுப்பாளர் திரு. சிவராஜ் சிங் சௌகான், இன்று மனோகர்பூர் பகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

-----------------------

*ஏனாம்- ரங்கசாமி* (18)

ஏனாம் பகுதியில், ஓஎன்ஜிசி நிறுவனத்தின் குழாய்ப் பாதைப் பணிகளால், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 5 ஆயிரத்து 279 மீனவர்களுக்கான 2ஆம் கட்ட இழப்பீட்டுத் தொகையும், முதல்கட்டத்தில் விடுபட்டுப் போன 231 மீனவர்களுக்கான இழப்பீட்டுத் தொகையும், விரைவில் அவரவர் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார். இதற்கென ஓஎன்ஜிசி நிர்வாகம், முறையே 54.74 கோடி ரூபாய், மற்றும், 6 கோடி ரூபாய் வழங்குவதாக, அவர் இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, ஓஎன்ஜிசி நிர்வாகத்தால் இழப்பீடு வழங்கப்படுவதும், புதுச்சேரி அரசின் டெல்லி பிரதிநிதி திரு. மல்லாடி கிருஷ்ணாராவ், இதற்கு தேவையான முயற்சிகளை மேற்கொண்டதும் பாராட்டத்தக்கது என்று அவர் கூறினார். முன்னதாக, முதல்கட்டத்தில் விடுபட்டுப் போன ஏனாம் பகுதி மீனவர்களுக்கு இழப்பீடு

வழங்குவதற்கான அரசாணையை முதலமைச்சர் வெளியிட்டார். திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

இதற்கிடையே, ஏனாம் பகுதி மீனவர்களுக்கு, 3ஆவது மற்றும் இறுதிக்கட்ட இழப்பீடு பெறுவது தொடர்பாகவும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, ஓஎன்ஜிசி நிறுவனத்திற்கு கடிதம் எழுதி இருப்பதாக, திரு. மல்லாடி கிருஷ்ணாராவை மேற்கோள் காட்டி, எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார்.

-----------------------

***விமானம்*** (12)

புதுச்சேரியில் இருந்து, பெங்களூரு மற்றும் ஹைதராபாத்திற்கு, இண்டிகோ நிறுவனத்தின் விமான சேவை, டிசம்பர் 20ஆம் தேதி முதல் தொடங்க உள்ளது. இந்த தினசரி விமான சேவைக்கான, ஏடிஆர் 72 ரக விமானம், பெங்களூரில் இருந்து, காலை 11.10க்கு புறப்பட்டு, பகல் 12.25க்கு புதுச்சேரி வந்தடையும் என்றும், பின்னர், மதியம் 12.45க்கு புதுச்சேரியில் இருந்து புறப்பட்டு, மதியம் 2.30க்கு ஹைதராபாத் சென்றடையும் என்றும், அறிவிக்கப் பட்டுள்ளது. இதேபோல, ஹைதராபாத்தில் இருந்து மதியம் 3.05க்கு புறப்படும் விமானம், மாலை 4.50க்கு புதுச்சேரி வந்தடைந்து, பின்னர் மாலை 5.10க்கு மீண்டும் புறப்பட்டு, மாலை 6.35க்கு, பெங்களூரு சென்றடையும் என்றும், புதுச்சேரி விமான நிலைய இயக்குநர் திரு. ராஜசேகர் ரெட்டி, இன்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

-----------------------

*சிறப்பு முகாம் (12)*

புதுச்சேரியில் தற்போது நடைபெற்று வரும் சுருக்க முறை வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளின் ஒருபகுதியாக, வரும் 9-10, 23-24 ஆகிய சனி-ஞாயிற்று கிழமைகளில், அனைத்து வாக்குச்சாவடிகளிலும், சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன. வாக்களார் பட்டியலில், பெயர் சேர்த்தல், நீக்குதல், மற்றும், திருத்தம் செய்தல் குறித்த விண்ணப்ப படிவங்கள், இம்முகாம்களில் பெற்றுக் கொள்ளப்படும். வரைவு வாக்காளர் பட்டியலும், இம்முகாம்களில் வைக்கப் பட்டிருக்கும் என்பதால், வாக்காளர்கள் தங்களின் பெயர் மற்றும் இதர விவரங்கள் சரியாக உள்ளதாக என்பதை சரிபார்த்துக் கொள்ளலாம் என்று, மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகம் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது. காரைக்காலிலும், 9-10, 23-24 ஆகிய விடுமுறை நாட்களில், இதேபோன்ற சிறப்பு முகாம்கள் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------

*வானிலை* (19)

இன்று தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சியினால், அடுத்த 48 மணி நேரத்தில், காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என்றும், இது, அதற்கடுத்த 2 நாட்களில், தமிழகம், மற்றும் இலங்கை கடலோரப் பகுதிகளை நோக்கி, மேற்கு திசையில் மெதுவாக நகரக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுஅல்லாது தென்கிழக்கு அரபிக் கடல் பகுதியிலும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தமிழகத்திலும், புதுச்சேரி-

காரைக்கால் பகுதிகளிலும், வரும் 18ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், கடலூர், மயிலாடுதுறை, விருதுநகர், மதுரை, தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதியிலும், ஓரிரு இடங்களில், கனமழை எதிர்பார்க்கப் படுகிறது. நெல்லை, குமரி, மற்றும், தூத்துக்குடி மாவட்டங்களில், இன்று, மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தமிழகத்தின் கடலோர பகுதிகளிலும், தென்மேற்கு வங்கக் கடல், மற்றும், அதை ஒட்டிய கடல் பகுதிகளிலும், சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, சென்னை மாவட்டம் மணலி மண்டலத்தில், 11 செ.மீ மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில், 4 செ.மீ மழை பெய்துள்ளது.

-----------------------

*கர்மயோகி* (12)

கடந்த அக்டோபர் மாதம் 19 முதல், 27ஆம் தேதி வரை நடைபெற்ற, கர்மயோகி சப்தாஹ் என்னும் தேசிய கற்றல் வாரத்தின் போது, அரசு ஊழியர்கள், iGOT இணைய தளம் மூலம் மொத்தம் 38 லட்சம் மணி நேரத்திற்கு ஆன்-லைன் பாடங்களைக் கற்று, முன் எப்போதும் இல்லாத அளவில் தாக்கம் ஏற்படுத்தி இருப்பதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த ஒருவார காலத்தில், மொத்தம் 45 லட்சம் பேர் ஆன்-லைன் படிப்புகளுக்கு பெயர்ப் பதிவு பெற்றதாகவும், இவர்களில், 4.3 லட்சம் பேர்,

குறைந்தபட்சம் 4 மணி நேரத்திற்கு பாடங்களை கற்றுள்ளதாகவும், மத்திய பணியாளர் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஆன்-லைன் படிப்பு முடிப்பவர்களின் தினசரி எண்ணிக்கை, முன்பிருந்த 40 ஆயிரம் என்னும் அளவில் இருந்து, தேசிய கற்றல் வாரத்தின் போது, 3.55 லட்சமாக அதிகரித்ததாக மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------

***விளையாட்டு வளாகம்*** (10)

மத்திய அரசின் தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி திரு. கிரீஷ் சந்திர முர்மு, இன்று ராஞ்சியில், மத்திய கணக்கு, மற்றும், தணிக்கை துறைக்கான பிரத்தியேக விளையாட்டு வளாகத்தை திறந்து வைத்தார். கணக்கு, மற்றும், தணிக்கை துறை சார்ந்த கிரிக்கெட், ஹாக்கி, மற்றும், கால்பந்து அணிகளுக்கான பயிற்சி, மற்றும் விளையாட்டு வசதிகள், இந்த விளையாட்டு வளாகத்தில் இடம்பெற்றுள்ளன. ராஞ்சி பகுதியில், பழங்குடி இனத்தைச் சேர்ந்த திறமையான ஹாக்கி வீரர்கள் அதிகம் இருப்பதால், குறிப்பாக, ஹாக்கி விளையாட்டின் வளர்ச்சிக்கும், பொதுவாக நாட்டின் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கும், இப்புதிய விளையாட்டு வளாகம் உதவிகரமாக இருக்கும் என, சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

-----------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

லஞ்ச ஊழலை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாது என்பதான அரசின் கொள்கை, லஞ்சத்தை முற்றிலுமாக வேரறுக்கும் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

ஏனாம் பகுதியில், ஓஎன்ஜிசி பணிகளால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான 2ஆம் கட்ட இழப்பீட்டுத் தொகை, விரைவில் அவரவர் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் இருந்து, பெங்களூரு மற்றும் ஹைதராபாத்திற்கு, இண்டிகோ நிறுவனத்தின் விமான சேவை, டிசம்பர் 20ஆம் தேதி முதல் தொடங்க உள்ளது.

அடுத்த 48 மணி நேரத்தில், வங்கக் கடலில், காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.